DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : STC /261/2025
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**A1 TO A3 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | மணி |
| Father / Husband Name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **06.08.2026**

**முதல் விசாரணை:**

1.)நான் அச்சிறுப்பாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 31.05.2025 ம் தேதி ஓய்வு பெற்று தற்போது மதுராந்தகத்தில் வசித்து வருகிறேன். நான் படாளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக கடந்த 05.07.2023 ம் தேதி பணியில் இருந்தேன். அப்போது மேற்படி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பார்த்தசாரதி என்பவர் 05.7.2023 ம் தேதி இரவு 20.00 மணிக்கு அஜித் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.354/2023 IPC பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.(**அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

2.) பின்னர் கடந்த 06.07.2023 ம் தேதி காலை 08.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அன்பழகன் மற்றும் தயாளன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் 16.08.2023 ம் தேதியில் 1 ம் எதிரி புருஷோத் என்பவருக்கும் 2 ம் எதிரி ராஜேஷ் மற்றும் 3 ம் எதிரி பூபேஷ் ஆகியோருக்கு 17.08.2023 ம் தேதி 41(A) CrPc அறிவிப்பு அனுப்பபட்டு காவல் நிலையத்திற்கு வரவழைத்து விசாரிக்கப்பட்டனர். அவர்கள் கைது செய்யப்படவில்லை. பின்னர் மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் இவ்வழக்கில் காயமுற்ற நபர் அஜித் என்பவருக்கு காயச்சான்று வழங்கிய மருத்துவர் தீனதயாளன் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (**மேற்படி காயச்சான்று நகல் என்பதால் குறியீடு செய்யப்படவில்லை.)** இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது 341, 294(b), 323, 506(1)–ன் IPC பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

**3.** எனது சக அதிகாரி பொய்யான புகாரினை பெற்று சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யாமல் தயார் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் நான் பொய்யான இறுதி அறிக்கையை எதிரிகள் மீது தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கு இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : STC/261/2025
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**A1 TO A3 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சிபி @ சிபிராஜ் |
| Father / Husband Name | செல்வராஜ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **06.08.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருவந்தாவார் ஊரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 4.7.2023ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் நான் எனது நண்பர் விக்னேஷ் என்பவரும் நடராஜபுரம் பேருந்து நிலையத்தில் பேசிக் கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் அ.த.சா.1 அஜித் என்பவர் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது ஆஜர் எதிரிகள் அ.த.சா.1 அஜித் என்பவரை வழிமடக்கி ஆபாசமாக பேசி கை மற்றும் காலால் எட்டி உதைத்து கொலை மிரட்டல் விடுத்து சென்றதை நேரில் பார்த்தாக போலிஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : STC/261/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**A1 TO A3 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | விக்கி @ விக்னேஷ் |
| Father / Husband Name | சுப்பிரமணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **06.08.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருவந்தவார் ஊரில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். வழக்கு குறித்து எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 4.7.2023 ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் நான் எனது நண்பர் சிபியும் நடராஜபுரம் பேருந்து நிலையத்தில் பேசிக் கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் அ.த.சா.1 அஜித் என்பவர் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது ஆஜர் எதிரிகள் அ.த.சா.1 அஜித் என்பவரை வழிமடக்கி ஆபாசமாக பேசி கை மற்றும் காலால் எட்டி உதைத்து கொலை மிரட்டல் விடுத்து சென்றதை நேரில் பார்த்தாக போலிஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : STC/261/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**A1 TO A3 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | அஜித் |
| Father / Husband Name | சிங்காரம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **06.08.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருவந்தாவர் ஊரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 08.00 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்கள் கையால் அடித்தார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.( **அந்த புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 4.7.2023 ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் நான் கோயாஸ் நிறுவனத்தில் பணியை முடித்து விட்டு வீட்டிற்கு செல்லும் போது நடராஜபுரம் பேருந்து நிலையத்தில் ஆஜர் எதிரிகள் என்னை வழிமடக்கி கட்டை மற்றும் பச்சை கொம்பால் அடித்து ஆபாசமாக பேசி எனக்கு கொலை மிரட்டல் விடுத்தததாக போலிஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**